2010 ஏப்ரல் 30]

ஒதுக்கியுள்ளார். துறையின் மூலமாக மருத்துவர்களை நியமித்துத் தர வேண்டும். சுண்டக்காமுத்தூர் முதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை நகராட்சி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். அதேபோல, கட்டடமும், சுகாதார மையமும் அமைக்கவேண்டும். சுண்டக்காமுத்தூர் மருத்துவமனையில் கூடுதல் வசதிகளைச் செய்து தரவேண்டும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சு.ப. வேலுமணி, நீங்கள்* demand-*ல் பேசவில்லை. கேள்வி கேட்பதைவிட்டு, அங்கே அது வேண்டும், இங்கே இது வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.* Demand-*ல் பேசுகிற மாதிரி பேசாதீர்கள். கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) சுண்டக்காமுத்தூருக்கான கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. சு.ப. வேலுமணி: *கேள்விக்கு சம்பந்தப்பட்டதுதான். 108 ஆம்புலன்ஸை எல்லா இடத்திற்கும் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் பேசும்போது, அது முதல்வரின் சாதனை என்று சொன்னார்கள். ஆனால், முன்னாள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. அன்புமணி ராமதாஸ் அவர்கள், நாங்கள்தான் கொண்டு வந்தோம் என்று சொல்கிறார்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

124—

தொழிற்சாலை

***111482—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் மூலிகைகள் மூலம் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் காய்ச்சலைத் தீர்க்கின்ற கொய்னா இலை factory இருந்தது. இப்போது அந்த factory மூடப்பட்டிருக்கின்றது. கொய்னா பட்டையின் மூலமாக மலேரியா காய்ச்சலுக்கான மருந்தைத் தயாரிக்கலாம். அபுகன்னி என்ற மூலிகை ஆஸ்துமா நோய்க்கு நல்லது. அந்த மூலிகை அங்கே இருக்கிறது. தண்ணீர்விட்டான் என்ற மூலிகை நரம்புத் தளர்ச்சிக்கு நல்லது, அதுவும் அங்கே கிடைக்கிறது. அனுமதார், குழந்தைகள் நோய்க்கு நல்லது. இதுபோன்ற அரிய வகை மூலிகைகளெல்லாம் அங்கே கிடைக்கின்றன. அதேபோல நீர்முள்ளி, கல் அடைப்புக்கு நல்லது. வாதமடச்சி, முடக்குவாதத்திற்கு நல்லது. வாப்பர் கொடி, பெண்களின் இரத்தப் போக்குக்கு நல்லது. பொன்னுவளை, வயிற்றுப் போக்குக்கு நல்லது. ஆமணக்குச் செடி, மஞ்சள் காமாலைக்கு நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கோவை தங்கம்: இந்த அரிய மூலிகைச் செடிகளெல்லாம் அங்கே இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சருக்கு இவ்வளவு மூலிகைகளின் பெயர்கள் போதுமா, இன்னும் கொஞ்சம் வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். அங்கே நிறைய மூலிகைச் செடிகள் இருப்பதால், மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பிரதேசம் என்பது தெரியும். அங்கே அதிகமாக தேயிலை மட்டுமே பயிரிடப்படுகின்றது. மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருட்களான மூலிகைச் செடி மரங்களோ, மருந்துகளோ வால்பாறையில் கனிசமான அளவில் இல்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாக இருப்பது உண்மை. எனவே, வால்பாறையில் மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் தேயிலை, காபி பயிர் மட்டுமே பயிரிடப்பட்டு, மிகுதியான அளவில் தனியார் மற்றும் அரசு தேயிலைத் தொழிற்சாலைகளில் அங்கே வாழும் மக்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். பெரும்பாலான இடங்களில் தேயிலைத் தோட்டங்களும், தேயிலைத் தோட்டங்களுக்குச் சொந்தமான குடியிருப்புப் பகுதிகளும் இருக்கின்றன. இப்பகுதியில் சிறு தொழில் நிறுவனங்கள் அமைக்கப் போதுமான இட வசதி இல்லை. அப்படி இருந்தாலும், ஆர்வமுள்ள தொழில் முனைவோர் இப்பகுதியில் மூலிகைச் சாறு தயாரித்தல், மருந்து தயாரித்தல், தேயிலைக் கழிவுகளிலிருந்து கபின் தயாரித்தல் போன்ற சிறு தொழில்களை வனத் துறையின் அனுமதி பெற்று, மூலிகையைக் கொள்முதல் செய்து தொழில் தொடங்க முன்வந்தால், அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் தயார் செய்து, வங்கிகள், கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து தேவையான நிதியுதவி பெற்றுத் தொழில் தொடங்க அனைத்து உதவிகளையும் மாவட்டத் தொழில் மையம் தரத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்ட அமைச்சர் நல்ல அமைச்சர். சிறந்த முறையில் பணியாற்றக்கூடியவர். அவரை நான் மீண்டும் கேட்டுக்கொள்வேன். வால்பாறையில் அரிய வகை மூலிகைகள்

இருக்கின்றன. அவருடைய பதிலிலும், சில இடங்களில் மூலிகைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார்கள். எனவே முயற்சி எடுத்தால்தான் முடியும். முயற்சி எடுத்ததன் பயனாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி வால்பாறைக்கு college வழங்கினார்களோ, அதேபோல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்தால், அங்கே தொழிற்சாலையைக் கொண்டு வரலாம். அங்கே படித்துவிட்டு வேலையில்லாமல் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும், சிறு தொழில் செய்வதற்கும் உதவியாக இருக்கும். சின்கோனா பகுதியில் போதுமான அளவுக்குக் கட்டடங்கள் இருக்கின்றன. வால்பாறையில் இருக்கின்ற சின்கோனா கட்டடங்களில் மூலிகை தயாரிக்கின்ற தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி, தனியார்கள் முன் வந்தால் அந்தக் கட்டடங்களை வாடகைக்குக் கொடுப்பதற்குக்கூட அரசு முயற்சிகள் எடுக்கும். வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 299 சிறு தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு, அதன்மூலம் 2,223 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகிறார்கள். ஆனைமலை சுற்றுவட்டாரப் பகுதியில் கிடைக்கும் மூலப்பொருட்களின் அடிப்படையில் தென்னை நார், முறுக்குக் கயிறு மற்றும் தென்னை நார்க் கழிவுக் கட்டிகள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் 40 தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் வாயிலாக ஆயிரக்கணக்கான நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள். மேலும் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மாவட்டத் தொழில் மையத்தின் மூலமாக கடந்த ஆண்டு 101 இளைஞர்களுக்கு மானியத்துடன்கூடிய சுமார் 50 இலட்சம் ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டு, சுய தொழில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

2010 ஏப்ரல் 30]

மேலும், இதே சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேத்துமடை பகுதியில் நடுத்தர நூற்பாலைகள், ஆத்துப்பொள்ளாச்சியில் சோயா உற்பத்தி நிலையம், சுந்தரபுரியில் பால் பதப்படுத்தும் நிலையம் ஆகியவை இயங்கி வருகின்றன. ஆகவே, தனியார்கள் யாராவது தொழில் துவங்க முன்வந்தால், அரசு எல்லா உதவிகளையும் மானியத்துடன் தரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தர்கள் எல்லாம் அந்த மூலிகைத் தழைகளைச் சாப்பிட்டுத்தான் பல ஆண்டுக் காலம் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள் என்ற சரித்திரங்கள் இருக்கின்றன. ஆகவே, மூலிகைச் செடிகள் அழிந்து போகாமல் பாதுகாக்கின்ற வகையில் அரசு அதற்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எனது துறைக்கு சம்பந்தமில்லாத கேள்வி. அரசினுடைய வேளாண்மைத் துறையிலும், வனத் துறையிலும் மூலிகைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பது எனக்குத் தெரியும். ஆகவே, அவற்றைப் பாதுகாக்க எல்லா முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவ்வாது மலையிலே உள்ள ஜமுனாமுத்தூர் பகுதியிலே இருக்கின்ற காடுகளிலே, கடுக்காய், கற்றாழை போன்ற மூலிகைப் பயிர்கள் அதிகம் விளைகின்றன. ஆனால், அவற்றை மலையிலிருந்து போளூருக்குக் கொண்டு வந்து

விற்பதிலே அங்கே இருக்கின்ற மலைவாழ் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஜமுனாமுத்தூர் மலைப் பகுதியிலே கடுக்காய், கற்றாழை போன்றவற்றை விற்றுப் பிழைக்கும் மலைவாழ் மக்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்காக, அங்கே இதுபோன்ற தொழிற்சாலைகளை அமைப்பதற்கு அரசு முன்வருமா அல்லது தனியார்கள் அங்கே சென்று கொள்முதல் செய்வதற்கான மையம் உருவாக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் முன் வந்தால் அதற்குரிய ஏற்பாடுகளை அரசு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

125—

கட்டட வசதி

***96839—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாநகரில் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 592, நாள் 15–10–2008–ல் ரூ.138.00 இலட்சம் (ரூபாய் நூற்று முப்பத்தெட்டு இலட்சம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.